



புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்புகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்.

## கழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே முதன்மையான அணியாகத் திகழும் இளைஞர் அணியினர்!

# கழகத் தலைவர் 2வது முறையாக முதலமைச்சராக அயராது பாடுபட வேண்டும்!

## புதுக்கோட்டையில் புதிய அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

**புதுக்கோட்டை, மே.25-**

**புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்புகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

அப்போது அவர், "கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இளைஞர் அணியில் கிடைத்திருப்பது பதவி அல்ல பொறுப்பு என்ற உணர்வுடன் புதிய நிர்வாகிகள் பணியாற்ற வேண்டும். மேலும், புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்டக் கழகங்களுக்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளின் வெற்றிக்கு இளைஞர் அணி நிர்வாகிகள் அயராது உழைக்க வேண்டும். கழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே முதன்மையான அணியாக திகழும் இளைஞர் அணி கழகத் தலைவர் 2வது முறையாக முதலமைச்சராக அயராது பாடுபட வேண்டும் என்று எழுச்சிமிக்க உரையாற்றினார்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:-

புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்டக் கழக ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் கலந்துகொண்ட உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் அடிக்கடி சொல்வதுண்டு, சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர், இப்போது துணை முதலமைச்சர் இதுவெல்லாம் நிரந்தரம் கிடையாது. இந்தப் பொறுப்புகள் எல்லாம் வரும், போகும். ஆனால், எனது மனதுக்கு எப்போதும் நெருக்கமான ஒரு பொறுப்பு என்றால், அது கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் பொறுப்புதான். அந்த உணர்வோடுதான் உங்களை எல்லாம் இன்று சந்திக்க வந்து இருக்கிறேன்.

### மூன்று விஷயங்கள் அடிப்படை

ஒன்றிய - நகர - பகுதி பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர் நியமனங்கள், மூன்று விஷயங்களின் அடிப்படையில்தான் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.இங்கு வருகை தந்து இருக்கிற மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களின் பரிந்துரை அடிப்படையிலும், கடந்து ஆண்டும் நம் அணியின் மாநில துணைச் செயலாளர்கள், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று நடத்திய நேர்காணல்கள், ஏற்கனவே, இருக்கிற நிர்வாகிகளின் பணிகளை கவனத்தில் எடுத்துக்கொண்டுதான், இந்த நியமனங்கள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும்.

இங்கு வந்து இருக்கக்கூடிய ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள் சில பேருக்கு என்மீது சில வருத்தங்கள் இருக்கலாம். ஏனென்றால், எப்போதுமே அவர்கள் கொடுக்கின்ற பரிந்துரைப் பட்டியல் அப்படியே வந்துவிடும். இந்த முறை நானும், நம் துணைச் செயலாளர்கள் எல்லாம் சேர்ந்து, அவர்கள் நேர்காணல் செய்யும்போது உங்களின் பணிகளை அவர்கள் குறித்துக்கொண்டு வந்தார்கள். அதையும் கவனத்தில் எடுத்துக்கொண்டுதான், இந்த முறை இந்தப் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு முதலில் மண்டல பொறுப்பாளர் இளையராஜா அவர்களுக்கும், மாவட்ட அமைப்பாளர்கள் சண்முகம் அவர்களுக்கும், மணிராஜன் அவர்களுக்கும், அன்பகம் செந்தில் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2 மணி நேரம் தேவைப்பட்டது. உங்கள் ஒவ்வொருவரின் பெயரையும் பார்த்து, படித்து அவர்கள் என்னென்ன பணிகள் செய்து இருக்கிறார்கள், என்னென்ன போராட்டங்களில் கலந்துகொண்டு உள்ளார்கள், பயிற்சிப் பாசறைகளில் கலந்து கொண்டார்களா, இல்லையா, அவர்கள் கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களா, அவர்களின் வரலாறு என்ன, அவர்கள் குடும்பத்தில் வேறு யாராவது பொறுப்பில் இருக்கிறார்களா என்று இவை அனைத்தையும் கவனத்தில்கொண்டு ஒவ்வொருவரின் பெயரும் இங்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இதையெல்லாம் ஏன் இங்கு சொல்கிறேன் என்றால், இந்த இடத்துக்கு நீங்கள் எல்லாம் சாதாரணமாக வந்துவிடவில்லை. ஏற்கனவே, நீங்கள் செய்து இருக்கின்ற பணிகளை எல்லாம் கவனத்தில் கொண்டுதான் இந்த இடத்திற்கு வந்து இருக்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனால், நீங்கள் எல்லாம் பார்த்துப் பார்த்து பல ஆய்வுகளுக்குப் பின் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள்.

### இந்தியாவிலேயே முதன்மையான அணி

உங்களுக்கு வழங்கப்பட்டு இருப்பது. பதவி கிடையாது. பொறுப்பு. ஆகவே, நீங்கள் அனைவரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இங்கு மாவட்ட - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் எல்லாம் வந்துள்ளார்கள். நம் இளைஞர் அணி, இன்றைக்கு கழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே முதன்மையான அணி என்றால், அது தி.மு.கவின் இளைஞர் அணிதான். இப்படி ஒரு வலிமையான அணியாக வளர்ந்து நிற்கிறது என்றால், அதற்கு இங்கு வந்திருக்கின்ற மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகரச் செயலாளர்களின் வழிகாட்டுதல்கள் மிகமிக முக்கியமானதாக இருந்தது. ஆகவே, இன்றைக்கு வந்துள்ள இந்த இளைஞர்களைப் பொறுப்புக்கு தேர்ந்தெடுத்து இருக்கிறோம். இவர்கள் எல்லாருமே இளைஞர்கள். அதிலும், பலர் புதியவர்கள். இவர்கள் சிறு சிறு பிழைகள் செய்தாலும், அதைப் பொறுத்துக் கொண்டு, அவங்களை நல்ல முறையில் வழிநடத்த வேண்டும் என்று மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். பொறுப்புக்கு வந்து இருக்கிற இளைஞர்கள், நமக்கு பொறுப்பு கிடைத்து விட்டது என்று, சும்மா இருந்திடக் கூடாது.

இளைஞர் அணி என்பது, ஒரு சார்பு அணி. ஆகவே, நீங்கள் என்ன பணிகளைச் செய்தாலும், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களின் கவனத்துக்கு எடுத்துச் சென்று, அவர்களின் அனுமதியைப் பெற்று, கழக நிகழ்ச்சிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்பகத்தில் இருந்து பணிகள் கொடுத்தாலும் சரி, தலைமையில் இருந்து தலைவர் சொன்னாலும் சரி, நீங்கள் ஒன்றிய அமைப்பாளராக இருந்தால், ஒன்றியச் செயலாளரிடம் சொல்லிவிட்டுத்தான் அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். நகர பேரூர், அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள், நகர, பேரூர்க்கழக செயலாளர்களிடன் ஆலோசனை செய்து விட்டு இளைஞர் அணி பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### மிகவும் கவனமாக செயல்பட வேண்டும்

கழகத்தின் அடித்தளம் என்றால் ஒன்றிய - நகர - பகுதி பேரூர் அமைப்புகளைத்தான் சொல்வார்கள். அதேபோல், இளைஞர் அணிக்கு அடித்தளம் என்றால் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் வரை இயங்குகிற இளைஞர் அணி நிர்வாகிகள் நீங்கள் தான். ஆகவே, நீங்க எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியும் சரியான திசையை நோக்கி இருக்க வேண்டும். எந்த ஒரு சிறிய தவறுக்கும் நீங்கள் இடம் கொடுத்துவிடக்கூடாது.

இன்றைக்கு எதிர்க்கட்சிகள் நமக்கு எதிராக ஏதாவது கிடைக்காதா? அதை வைத்து அரசியல் செய்ய மாட்டோமா? என்று அவர்கள் எல்லாம் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதையெல்லாம் நீங்கள் மனதில் எடுத்துக்கொண்டு, உங்களின் செயல்கள் அனைத்தும் சரியான திசையை நோக்கி இருக்க வேண்டும். மிகவும் கவனமாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இளைஞர் அணியைப் பொறுத்தவரை, களத்தில் நீங்கள் வேலை செய்தால், உங்களுக்கான அங்கீகாரம் தானாக வரும். அதற்கு சிறந்த எடுத்துகாட்டுகளை, நீங்கள் இந்த மேடையிலேயே பார்க்கலாம். அன்பில் மகேஷ் அவர்கள் இளைஞர் அணியில் இருந்து வந்தவர், மாநிலத் துணைச் செயலாளராக இருந்து, மாவட்டச் செயலாளராகி, இன்று அமைச்சராக இருக்கிறார். அண்ணன் செல்லப்பாண்டியன் அவர்கள் இளைஞர் அணி பணியை மேற்கொண்டு, இன்றைக்கு மாவட்டச் செயலாளராக இருக்கிறார். சகோதரர் இளையராஜா அவர்கள், திருவாரூர் மாவட்ட அமைப்பாளராக சிறப்பாகப் பணியாற்றி, தலைவர் அவர்களே தேர்ந்தெடுத்து, இன்றைக்கு தாட்கோவின் தலைவ ராகச் செயல்படுகிற வாய்ப்பையும் பெற்று இருக்கிறார்.

### மினிட் புக்தான் உங்களின் பணிக்கான ஆதாரம்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், இளைஞர் அணியில் சிறப்பாக செயல்பட்டால், நிச்சயம் தாய் கழகத்தில் அங்கீகாரம் கிடைக்கும். இன்றைக்குப் பல அமைச்சர்கள், பல மாவட்டச் செயலாளர்கள், பல்வேறு அணிகளின் தலைவர்கள் இளைஞர் அணியில் இருந்து வந்தவர்கள் இருக்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். உங்களின் பணிகளை அன்பத்திலிருந்தும், நானும் தொடர்ந்து கவனித்துக் கொண்டு இருப்போம். எனவே, எந்தவிதத்திலும், எந்தத் தவறும் நடந்துவிடாமல் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு ஒன்றிய நகர - பகுதி பேரூரில் இருக்கிற அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களின் பணிகளை நான் தனிப்பட்ட முறையில் நிச்சயம் பார்த்துக்கொண்டே இருப்பேன். ஒவ்வொருவரை பற்றியும் விசாரித்து;க கொண்டே இருப்பேன். அதேபோல் உங்கள் பணிகளையும் கண்டிப்பாக நான் பாராட்டுவேன். நீங்க செய்கின்ற ஒவ்வொரு வேலையையும், உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மினிட் புக்கில் ஆவணப்படுத்த வேண்டும். அந்த மினிட் புக்கில் நிகழ்ச்சிக்கு வந்து இருக்கின்ற கழகத்தினரிடம் கையெழுத்து வாங்குங்கள். மினிட் புக்தான் உங்களின் பணிக்கான ஆதாரம்.



நாளைக்கே யாராகிலும் உங்கள் மேல் குறை சொன்னார்கள என்றால், அவர் எந்த நிகழ்ச்சிக்கும் வரவில்லை, எந்த பணியும் செய்யவில்லை என்றால், அதை தகர்க்கின்ற ஓர் ஆதாரம்தான் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மினிட் புக் என்பதை நீங்கள் உணர வேண்டும். எனவே, மினிட் புக்கை சரியாகப் பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் சரியாக உழைத்துக்கொண்டே இருங்கள். உங்களுக்கான அங்கீகாரத்தை சரியான நேரத்தில், நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் அளிப்பார் என்று நிச்சயமாக உறுதியளிக்கிறேன்.

### புதிய உறுப்பினர்கள் சேர்க்கை

இளைஞர் அணியின் சார்பாக பல்வேறு பணிகளை நாம் முன்னெடுத்துக்கொண்டு இருக்கிறோம். அதில், முக்கியமான சில பணிகளை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். `இல்லம் தோறும் இளைஞர் அணி' என்று ஒன்றை ஆரம்பித்து, வீடு வீடாக சென்று, இளைஞர் அணிக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்க்கிறோம்.இங்கு வந்திருக்கிற புதிய நிர்வாகிகள், அந்தப்பணியைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லம் தோறும் இளைஞர் அணி திட்டத்தின்கீழ், நீங்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் போய், நம் கழகத்தின் கொள்கைகளை எடுத்துச் சொல்லி, கழக அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி, இளைஞர்களை இளைஞர் அணிக்கு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இவ்வளவு நாள், சட்டமன்றத் தொகுதி வரை, பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை நடத்தினோம். இப்போது, அதை ஒன்றிய அளவில் நடத்த திட்டமிட்டு இருக்கிறோம். அதை நடத்தும் போது நீங்கள் தவறாமல் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, சட்டமன்றத் தொகுதிகள் தோறும் நூலகங்களைத் திறக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு இருந்தார். இப்போது சுமார் 100 நூலகங்களை தமிழ்நாடு முழுக்க இளைஞர் அணியின் சார்பாக, தமிழ்நாட்டில் மட்டும் திறந்து இருக்கிறோம். இது ஒரு மிகப்பெரிய சாதனை.

அதிலும் குறிப்பாக, இந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு வருஷத்துக்கு முன்பே, 6 தொகுதிகளிலும், கலைஞர் நூலகங்களைத் திறந்து வைத்து இருக்கிறோம். அதற்கு இந்த புதுக்கோட்டை மாவட்ட இளைஞர் அணிக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த நூலகங்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். மாணவர்களை, இளைஞர்களை அந்த நூலகங்களுக்கு அழைத்து வந்து அதைப் பயன்படுத்த வைக்க வேண்டும். இளைஞர் அணி சார்பாக, கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, `என் உயிரினும் மேலான' பேச்சுப் போட்டியை நடத்தி, 183 இளம் பேச்சாளர்களை தேர்வு செய்து தலைமைக்கு கொடுத்து இருக்கிறோம்.

### தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்

அவர்களை எல்லாம், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் ஒப்புதலுடன், ஒன்றிய அளவில், நகரம், பேரூர் அளவில் சிறு சிறு கூட்டங்களில் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய செலவு எல்லாம் தேவையில்லை. ஒரு மைக், இரண்டு லைட், ஒரு ஐம்பது நாற்காலிகள் போட்டால் போதும். தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துங்கள்.

பெரிய ஹால் புக் செய்து, பெரிய செலவு செய்து பண்ண வேண்டும் என்று அவசியமே கிடையாது. நல்ல இளம் பேச்சாளர்கள் 183 பேரைக் கொடுத்து இருக்கிறோம். நிகழ்ச்சி நடத்த போகிறோம் என்று சொன்னீர்கள் என்றால், அன்பகத்திலிருந்து நாங்கள் அனைத்து ஏற்பாடுகளும் செய்து கொடுத்து விடுவோம். அதுமட்டுமல்ல, பாகத்துக்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்து சமூக வலைத்தளப் பயிற்சி வகுப்புகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு இருக்கிறோம். அதை உங்கள் பகுதியில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் அன்பகத்தில் இருப்பவர்கள், மண்டல பொறுப்பாளர், மாவட்ட அமைப்பாளர்களின் வழிகாட்டுதல்களைப் பெற்று நல்லபடியாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### இந்தியைத் திணிக்க முயற்சி

சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் சரியாக 8 மாதங்கள்தான் இருக்கின்றன. அதற்கெல்லாம் நாம் இப்போதிலிருந்தே தயாராக வேண்டும். இன்றைக்கு தமிழ்நாடு மிக முக்கியமான பிரச்சினைகளை எதிர்கொண்டு இருக்கிறது. புதியக் கல்விக் கொள்கை என்றுச் சொல்லி, இந்தியைத் திணிக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சி செய்கிறது.

நல்லவேளை, இப்போது அ.தி.மு.க மட்டும் ஆட்சியில் நீங்கள் யோசித்துப் பார்த்திருக்க வேண்டும். மும்மொழிக்கொள்கை வேண்டாம், 10 மொழிக்கொள்கைகூட கொண்டு வாருங்கள் என்று எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் முதலமைச்சராக இருந்தார் என்றால், ஒன்றிய அரசிடம் கெஞ்சிகொண்டு அவரே டெல்லிக்குச் சென்று கையெழுத்து போட்டுவிட்டு வந்து இருப்பார்.

இன்றைக்கு என்னிடம் பத்திரிக்கையாளர்கள் கேட்கிறார்கள். நிதி ஆயோக் கூட்டத்திற்கு முதலமைச்சர் சென்றுள்ளாரா என்று. ஆமாம், சென்று இருக்கிறார். நம் மாநிலத்தின் நிதி உரிமையைப் பெறுவதற்காக தைரியமாக சென்று இருக்கிறார் என்று சொன்னேன். உங்களுக்குத் தெரியும், கேள்விப்பட்டு இருப்பீர்கள். எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஒரு மாதத்திற்கு முன்பு டெல்லி சென்றார். யாருக்குமே சொல்லாமல் திருட்டுத்தனமாக சென்றார். அதுமட்டுமல்ல, டெல்லிக்குச் சென்று இறங்கியவுடன், விமான நிலையத்தில் செய்தியாளர்கள் கேட்கிறார்கள். எதுக்கு வந்து இருக்கிறீர்கள் டெல்லிக்கு, அது எனக்கே தெரியாது என்று சொல்லிவிட்டுச் சென்றார். மூன்று கார்களில் மாறி மாறி சென்றார். யாரைப் பார்க்கச் சென்றார் என்று எனக்குத் தெரியாது.

### உச்சநீதிமன்ற உத்தரவு

நம் முதலமைச்சர் அவர்கள் அப்படி செல்லவில்லை. தைரியமாக சென்று இருக்கிறார். பத்திரிக்கையாளர்கள் இன்று என்னிடம் ஈ.டி ரைடுக்குப் பயந்து சென்று இருக்கிறாரா என்று கேட்டார்கள். உங்களுக்குத் தெரியும், ஒரு மூன்று நாட்கள் அந்த செய்திதான் ஓடிக்கொண்டு இருந்தது. ஆனால், நம் தலைவர் அவர்கள் உச்சநீதிமன்றத்தில் உத்தரவு வாங்கி வந்துவிட்டோம். நான் பத்திரிகையாளர்களிடம் சொன்னேன். நான் யாருக்கும் பயப்பட மாட்டேன், எங்கள் தலைவர்கள் யாரும் அப்படி பயப்படமாட்டார்கள், கலைஞர் அப்படி எங்களை வளர்க்கவில்லை. தி.மு.க என்ற இயக்கம் சுயமரியாதை இயக்கம். ஈ.டிக்கும் பயப்பட மாட்டோம், மோடிக்கும் பயப்பட மாட்டோம். தவறு செய்தவன்தான் பயப்பட வேண்டும். எனக்கு மனதில் எந்தத் தவறும் கிடையாது. யாராக இருந்தாலும் சட்டப்படி எதிர்கொள்ள தயார். ஏனென்றால், இங்கு நடந்து கொண்டு இருப்பது, நம் தலைவர் தலைமையிலான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் மகத்தான தலைவரின் திராவிட மாடல் ஆட்சி. அதனால்தான், சங்கிகளுக்கும், சங்கிளின் அடிமைகளுக்கும் எப்போதுமே நம்மை பார்த்தால் பயம். யாரை வேண்டுமானாலும் மிரட்டி விடலாம், ஆனால், தி.மு.ககாரனை மட்டும் மிரட்ட முடியாது என்பது மோடி அவர்களுக்குத் தெரியும்.

புதியக் கல்விக்கொள்கை என்று ஒன்றைக் கொண்டு வருகிறார்கள். நம் பள்ளிக்கல்வித் துறைக்கு வரவேண்டிய 2 ஆயிரத்து 500 கோடி ரூபாயை நிறுத்தி வைத்து விட்டார்கள். புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்து, அப்போது இந்தப் பணத்தைக் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால், தலைவர் அவர்கள் சொல்லி விட்டார், நீங்கள் 10 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தால்கூட, உங்கள் புதியக் கல்விக் கொள்கையை, நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றுச் சொன்னார். அதற்கான காரணங்களை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். கழகத்தின் கொள்கைகளை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்காகத்தான் இந்த அறிமுகக் கூட்டத்தை முதல் அடியாக எடுத்து வைத்துள்ளோம்.

எனவே, சென்ற நாடாளுமன்ற தேர்தலிலும் சரி, சென்ற சட்டமன்ற தேர்தலிலும் சரி தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் சென்றேன். அப்போது நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது சொன்னேன். வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயம் மிகப்பெரிய வெற்றியைப் பெறுவோம். அதற்கு இளைஞர் அணி தம்பிமார்கள் களத்தில் இறங்கி, அந்தப் பணியை செய்து முடிப்பார்கள் என்று சொன்னேன்.

இப்போதும், அதே தைரியத்துடன் சொல்கிறேன். வருகிற சட்டமன்றத் தேர்தல் நம் தலைவர் இரண்டாவது முறையாக முதலமைச்சராக அமர வேண்டும் என்றால், இளைஞர் அணி தம்பிமார்கள் நீங்கள் களத்தில் இறங்கி உங்களின் பணியை, நம் ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

### மீண்டும் ஏற்படக் கூடாது.

தி.மு.க மட்டும் ஆட்சிக்கு மீண்டும் வரவில்லை என்றால், மீண்டும் அ.தி.மு.க ஆட்சிக்கு வந்தால், தமிழ்நாட்டின் உரிமைகள், எப்படி கடந்த 10 வருடத்தில் எப்படி அனைத்து உரிமைகளையும் விட்டுக் கொடுத்தார்களோ, அப்படிக் கொடுத்துவிடுவார்கள். அதேமாதிரி ஒரு நிலைமை மீண்டும் ஏற்படக் கூடாது. தமிழ்நாடு இன்றைக்கு அனைத்துத் துறைகளிலும் தலை நிமிர்ந்து நடக்கிறது.

விளையாட்டுத் துறையில் நம்பர் ஒன் இடத்திற்குச் சென்று விட்டோம். தொழிற்துறையில் நம்பர் ஒன் இடத்திற்குச் சென்றுவிட்டோம். மாநிலங்களின் பட்டியலை எடுத்து பார்த்தீர்கள் என்றால், தரவரிசையில் இந்தியாவிலேயே அனைத்துத் துறைகளிலும் நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்து இருக்கிறது என்றால், அதற்கு காரணம், நம் முதலமைச்சர் கொண்டுவந்த திட்டங்கள்தான் காரணம். அந்தத் திட்டங்களை எல்லாம் நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். அவற்றைத் தெரிந்து கொண்டு, மக்களிடம் திட்டங்களைக் கொண்டு சேருங்கள்.

மக்களுடன் நெருங்கிய தொடர்பில் இருங்கள். அதுதான் மிகமிக முக்கியம்.அவர்கள் வைக்கின்ற கோரிக்கைகளை கேட்டு, அதை உங்களால் செய்ய முடிந்தால் நீங்களே செய்து கொடுத்துவிடுங்கள். இல்லையென்றால், உங்கள் பகுதியில் இருக்கின்ற ஒன்றியச் செயலாளரையோ, பேரூர் செயலாளரையோ, நகரச் செயலாளரையோ அல்லது அமைச்சரையோ, மாவட்டச் செயலாளரையோ பார்த்து, மக்கள் பிரதிநிதிகளைப் பார்த்து செய்து கொடுக்க முயற்சி செய்யுங்கள்.

தமிழ்நாட்டு மக்களுக்குத் தெளிவாக தெரியும். மக்களுக்கு யார் நல்லது செய்வார்கள். அவர்களைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். அது நம் தலைவர்தான் என்பது ஆணித்தரமான ஒரு விஷயம். ஏனென்றால், ஒவ்வொரு திட்டத்தையும் நம் தலைவர் அவர்கள் பார்த்து பார்த்து செய்து கொண்டு இருக்கிறார்.

### 200 தொகுதிகள் வெற்றி பெறுவோம்

தலைவர் அவர்கள், வருகிற சட்டமன்ற தேர்தலில் குறைந்தது 200 தொகுதிகள் வெற்றி பெறுவோம் என்று சொல்லி இருக்கிறார். அந்த 200 தொகுதிகளில் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றிபெற வேண்டும் என்றால், அதற்கு இளைஞர் அணி தம்பிமார்கள் எங்களுக்குத் துணை நின்று, தலைவர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராக அமர்வதற்கு மிகமிக முக்கியமான காரணமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இங்கு வந்திருக்கின்ற அனைவரையும் வருக, வருக என வரவேற்று. உங்களின் பணிகள் அனைத்தும் சிறக்கட்டும்.

கழகம் 7 ஆவது முறையாக ஆட்சி அமைக்க, கழகத்தலைவர் 2வது முறையாக முதலமைச்சராக, நாம் உறுதியேற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்ட இளைஞர் அணியின் ஒன்றிய நகர - பகுதி பேரூருக்கான புதிய நிர்வாகிகளான உங்கள் பணிகள் சிறக்க என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அவர் எழுச்சிமிகு உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, கே.ஆர்.பெரிய கருப்பன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவ. வீ. மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன், இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளரும், தாட்கோவின் தலைவருமான இளையராஜா, அயலக அணியின் மாநில செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எம்.அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் வை.முத்துராஜா, ஆ.தமிழரசி மற்றும் அஞ்சுகம் மீனாட்சிசுந்தரம், மாநகர மேயர் திலகவதி செந்தில், கோவி.லெனின், விக்னேஷ் ஆனந்த், மாநகரச் செயலாளர் ராஜேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் சண்முகம், மணிராஜன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கணேஷ், இரு மாவட்டங்களின் இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள் கலைஞர் மு.கருணாநிதி, இளஞ்செழியன், சிவக்குமார், அன்சாரி பாசித், தமிழரசு, கங்கை கவிக்குமார், நசுருதீன், முகமது ரபீக், இளையராஜா, மாநகரத் துணை அமைப்பாளர்கள் தன்வீர் அகமத், ஹரிஹரன், ஞானவேல், மகேந்திரன், ஜெரால்டு விகேஷ், மணிபாரதி, பாண்டியராஜன், கார்த்திக் உள்பட கழக இளைஞர் அணியின் புதிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.